**Starting time 11.16 A.M.**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 335/2013**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. Sathya, Gr. III Bench Clerk of this court, on 13.12.2021 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : ராமு | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

1 முதல் 3 வரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: எனது குடும்பத்தில் நான்தான் மூத்தவர் என்றால், சரிதான். எனக்குப் பின்னர் சன்னாசி நாயுடு, சின்னசாமி நாயுடு, கண்ணன் என்ற மூன்று தம்பிகள் உள்ளர்கள் என்றால், சரிதான். நானும், எனது தம்பிகள் மூவரும் 1966-ம் ஆண்டே பாகம் பிரித்துக் கொண்டோம் என்றால், சரியல்ல, அப்போது நான் ராணுவத்தில் பணியில் இருந்தேன். நான் சொல்வது தவறு என்றும், நானும் பாகம் பிரித்துக் கொண்டபோது உடன் இருந்தேன் என்றால், சரியல்ல. எனக்கு சின்னசாமி என்ற ஒரே மகன் என்றால், சரிதான். எனது அம்மா பெயர் லட்சுமியம்மாள் என்றால், சரிதான். எனது மனைவி பெயர் ஜெயலட்சுமி என்றால், சரிதான். எனது மகன் சின்னசாமியின் மனைவி பெயர் வளர்மதி என்றால், சரிதான். எனது மகன் சின்னசாமிக்கும், மருமகள் வளர்மதிக்கும் நான்கு குழந்தைகள் என்றால், சரிதான். அந்த நான்கு பேரில் ஒருவர் பெயர் சண்முக சுந்தரம் மற்றவர்கள் பெயர் வேங்கடபதி, யுவராஜ் மற்றும் மணி என்றால், சரிதான். எனது மருமகள் வளர்மதி உயிருடன் உள்ளாரா என்றால், இல்லை காலமாகிவிட்டார். எனது மகன் சின்னசாமி உயிருடன் உள்ளாரா என்றால், அவரும் காலமாகிவிட்டார். எனது மகன்

சின்னசாமி இவ்வழக்கிற்கு முன்பு இறந்தாரா அல்லது வழக்கிற்கு பின்பு இறந்தாரா என்றால், வழக்கு தாக்கல் செய்வதற்கு 6 மாதத்திற்கு முன்பு காலமானார். வா.சா.ஆ.1 பாகப்பிரிவினையில் எனக்கு A அட்டவணை சொத்துக்கள் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால், சரிதான். எனது மகன் சின்னசாமியும், அவரது குடும்பத்தினரும், சேலம், அம்மாபேட்டையில் குடும்பத்துடன் குடியிருந்து வந்தார்கள் என்றால், சரிதான். வா.சா.ஆ.1 பாகப்பிரிவினையில் உள்ள சொத்துக்கள் எங்கள் குடும்ப பரம்பரை சொத்துக்கள் என்றால், சரிதான். அந்த வகையில் பாகப்பிரிவினையில் எனக்கு பாகமாக வந்த சொத்துக்களில் பாதிபாகம் எனக்கும், பாதிபாகம் எனது மகன் சின்னசாமிக்கு சேரும் என்றால், சரிதான். எனது மகன் காலமானபோது அவருக்கு என்ன வயது என்றால், 36 வயது இருக்கும். தாவா சொத்துக்களை பொறுத்து எனது மகன் சின்னாசமி யார் மீதும், எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். எனது அம்மா லட்சுமியம்மாள் உயிருடன் உள்ளாரா என்றால், காலமாகிவிட்டார். எனது மனைவி ஜெயலட்சுமி, சண்முக சுந்தரம், வேங்கடபதி, யுவராஜ் மற்றும் மணி யாரும் இவ்வழக்கில் தரப்பினர்களாக இல்லை என்றால், சரிதான். எனது மகன் சின்னசாமிக்கு தாவா சொத்தில் பாத்தியப்பட்ட பாதி பாகம் மேற்படி ஜெயலட்சுமி, சண்முக சுந்தரம், வேங்கடபதி, யுவராஜ் மற்றும் மணி ஆகியோருக்கும் பாத்தியப்பட்டது என்றால், சரிதான். வேங்கடபதி உயிருடன் உள்ளாரா என்றால், திருமணமான ஒரு வருடத்தில் காலமாகிவிட்டார். வேங்கடபதியின் மனைவி எங்குள்ளார் என்றால், எனது மகன் வேங்கடபதி காலத்திற்குபிறகு வெளியூர் சென்றுவிட்டார். வேங்கடபதியும் மனைவியும் இவ்வழக்கில் தரப்பினராக இல்லை என்றால், சரிதான். சின்னசாமியின் வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காததால் வழக்கே நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. தாவா சொத்து முழுவதும் எனக்கு மட்டுமே சொந்தமென்று விளம்புகை பரிகாரம் கேட்கவே எனக்கு உரிமையில்லை என்றால், சரியல்ல. எனவே இவ்வழக்கில் அத்தியாவசிய தரப்பினர்களை சேர்க்காத காரணத்தால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால், சரியல்ல. நானும்,

எனது மகன் சின்னசாமி இளவராக இருந்தபோது, இளவருக்கு காப்பாளராக இருந்து இருவரும் சேர்ந்த தாவா சொத்தை 14.09.1967 அன்று எனது தம்பியான 1-ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்துக் கொடுத்துள்ளோம் என்றால், சரியல்ல. அந்த கிரயத்திற்கு முன்பே 27.10.1966-ல் கிரயத் தொகையின் முன்பணமாக ரூ.1,500/-ஐ 1-ம் பிரதிவாதியிடமிருந்து வாங்கியுள்ளோம் என்றால், சரியல்ல. அதன்பின்பு பாக்கி கிரயத் தொகை ரூ.4,000/-ஐ 1-ம் பிரதிவாதியிடம் இருந்து பெற்றுக் கொண்டு 14.09.1967 அன்று கிரயப்பத்திரம் எழுதி பதிவு செய்துக் கொடுத்தோம் என்றால், சரியல்ல. அக்கிரயப் பத்திரம் ஆத்தூர் சர்பதிவாளர் அலுவலக ஆவண எண் 3251/1967-ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. வேறு சொத்து வாங்கவும், வீடு வாங்கவும்தான் அச்சொத்தை கிரயம் செய்துக் கொடுத்துள்ளோம் என்றால், சரியல்ல. அந்த கிரயப் பத்திரத்தில் காட்டுக்கோட்டை கிராமத்தை சேர்ந்த வரதப்ப நாயுடு மகன் பொன்னுசாமி நாயுடு என்பவர் ஒரு சாட்சியாகவும், எனது தம்பி K.V. கண்ணன் ஒரு சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால், சரியல்ல, நான் கிரயப் பத்திரமே எழுதிக் கொடுக்கவில்லை. எனவே தாவா சொத்தை பொறுத்து நான் கடந்த 14.09.1967 அன்று உரிய பிரதிபலனை பெற்றுக் கொண்டு கிரயம் செய்துக் கொடுத்துள்ளேன் என்றால், சரியல்ல. 14.09.1967-ல் இருந்து இதுநாள் வரை தாவா சொத்துக்களை 1-ம் பிரதிவாதியும், அவரது வாரிசுகளும்தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரிதான். என்னால் தற்போது படிக்க முடியுமா என்றால், வயது முதிர்வின் காரணமாக படிக்க முடியவில்லை. 14.09.1967 தேதியிட்ட கிரயப்பத்திரத்தின் நகலை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. அந்த கிரயப் பத்திரம் செல்லாது என்ற பரிகாரம் கேட்டுள்ள இவ்வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். எனவே அந்த காரணத்தினாலும் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. மேற்படி கிரயத்தின் மூலம் 1-ம் பிரதிவாதியிடமிருந்து நான் பெற்ற கிரயத் தொகையைக் கொண்டு காட்டுக்கோட்டை கிராமத்தில் நிலம் வாங்கினேன் என்றால், சரியல்ல. அதன்பின் அந்த சொத்தை 10.06.2002 அன்று கண்ணன் என்பவருக்கு

ரூ.1,50,000/-க்கு கிரயம் செய்து கொடுத்துவிட்டேன் என்றால், சரியல்ல. மேற்படி கண்ணன் என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்த சொத்தை நான், எனது மனைவி, மகன்கள் சின்னசாமி, வசந்தா, சரசு, கிருஷ்ணவேணி, சண்முக சுந்தரம், அப்போது மைனராக இருந்த வெங்கடேஷ், யுவராஜ், மணி ஆகிய அனைவரும் சேர்ந்து கிரயம் செய்து கொடுத்துள்ளோம் என்றால், சரியல்ல. எனக்கு 1967-ம் வருட கிரயமும், 2002-ம் வருட கிரயமும் தெரியும் என்றும், வழக்கிற்காக வேண்டி அவைகளை தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால், சரியல்ல. நான் ராணுவத்தில் பணிபுரிந்தது சம்பந்தமாக வா.சா.ஆ.3 பணிச்சான்று தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். வா.சா.ஆ.3 சான்றைப்போல் பணிச்சான்று எதையும் ராணுவத்தில் வழங்குவது இல்லை என்றால், சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் 2 வது வரியில் வருடம் 1957 என்று இருப்பதில், 5 என்ற எண் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. எனது வழக்குரையில் நான் 19.12.1972 வரை பணியில் இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். ஆனால், வா.சா.ஆ.3 சான்றை நான் 20.12.1972 வரை பணியில் இருந்ததாக உள்ளதால் வா.சா.ஆ.3 சான்றே தவறானது என்றால், சரியல்ல. அதேபோல் வா.சா.ஆ.3 சான்றில், நான் பணியில் இருந்த காலம் 15 வருடம், 17 மாதம், 9 நாட்கள் என்று சொல்லப்பட்டுள்ளதே தவறானது என்றால், சரியல்ல. வா.சா.ஆ.3 சான்றில் கையொப்பமிட்டுள்ள அலுவலரின் கையெழுத்தின்கீழ் Major, OIC NER Gp என்றுள்ளது என்றால், சரிதான். நான் ராணுவத்தில் என்னவிதமான பணியில் இருந்தேன் என்றால், சிப்பாய்யாக இருந்தேன். நான் சிப்பாய்யாக பணியில் இருந்திருந்தால், வா.சா.ஆ.3-ல் NER என்று குறிப்பிட்டிருக்காது என்றால், சரியல்ல, நான் சிப்பாய் ஆகதான் பணியில் இருந்தேன். எனக்கு வருடத்திற்கு 56 நாட்கள் விடுமுறை என்றால், சரிதான். நான் 1967-ம் ஆண்டு எந்த இடத்தில் பணியில் இருந்தேன் என்றால் ஜம்முவில் இருந்தேன். நான் 1967-ம் ஆண்டு ஜம்முவில் பணியில் இருந்ததற்காக வேண்டி சான்று எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். நான் விடுமுறை காலத்தில் பயணம் செய்யும் காலத்திற்கும் சேர்த்து விடுப்பு வழங்கப்படும் என்றால்,

சரிதான். அந்த விடுப்பை தவிர, தற்செயல் விடுப்பாக வருடத்திற்கு 30 நாள் கொடுப்பார்கள் என்றால், 15 நாள்தான் கொடுப்பார்கள். 15 நாட்கள் மட்டும்தான் கொப்பார்கள் என்று சொல்வது தவறு என்றும், 30 நாட்கள் கொடுப்பார்கள் என்றும், அதை மூன்று காலமாக 15+15, 10+20, 20+10 என பிரித்துக் கொடுப்பார்கள் என்றால், சரியல்ல, 15 நாள் மட்டும்தான் நான் பணிபுரிந்தபோது விடுப்பு கொடுப்பார்கள். நான் ராணுவத்தில் சேர்வதற்காக படிப்பை எங்கு படித்தேன் என்றால், காட்டுக்கோட்டையில் உள்ள பள்ளியில்தான் படித்தேன். நான் சொல்வது தவறு என்றும் நான் சிப்பாய்யாக பணியில் சேர்வதற்கே புனேவில் உள்ள இந்திய ராணுவ அகடமியில் படித்திருக்க வேண்டும் என்றால், சரியல்ல. நான் பணியில் இருந்த சமயத்தில் 14.09.1967 தேதியன்றும், அதற்கும் முன்பும், பின்பும் விடுப்பு எடுத்து ஊருக்கு வந்து 1-ம் பிரதிவாதியிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு தாவா சொத்துக்களை கிரயம் செய்து கொடுத்துள்ளேன் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.3 சான்றை யார் வாங்கியது என்றால், நான்தான் வாங்கினேன். வா.சா.ஆ.3 சான்றை வாங்குவதற்கு வெல்லிங்டனில் உள்ள ராணுவ அலுவலத்தில் மனு எதுவும் கொடுத்தேனா என்றால், நேராக சென்று மனு கொடுத்து அன்றே சான்று வாங்கினேன். வா.சா.ஆ.3 சான்றை வழங்கிய அலுவலர் பெயர் என்னவென்றால், அது தெரியவில்லை. வா.சா.ஆ.3 சான்றில் உள்ள முத்திரையில் தேதி எதுவும் எழுதவில்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.3 சான்றில் வழங்கிய அலுவலத்தின் பெயரே தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அந்த சான்றை அதில் குறிப்பிட்டுள்ள அலுவலகத்தால், குறிப்பிட்டுள்ள தேதியில் வழங்கப்படவில்லை என்றால், சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் கையொப்பமிட்டுள்ள நபரால் அந்த ஆவணம் வழங்கப்படவில்லை. எனக்கு தெரிந்தவர்களின் உதவியுடன் வா.சா.ஆ.3 ஆவணத்தை வெல்லிங்டனில் உள்ள ராணுவ அலுவலகத்தால் வழங்கப்பட்டதாக வழக்கிற்காக வேண்டி தயாரித்துள்ளேன் என்றால், சரியல்ல. இவ்வழக்கில் முதலில் இருந்தே நான் 1-ம் பிரதிவாதி சன்னாசி பெயருக்கு கிரயம் எழுதிக் கொடுக்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். ஆனால் 1-ம்

பிரதிவாதி தாவா சொத்தை உரிய பிரதிபலனுக்கு கிரயம் பெற்றதாக பதிலுரையில் சொல்லியுள்ளார் என்றால், சரிதான். எனவே 14.09.1967 தேதியிட்ட கிரயப் பத்திரம் சம்பந்தப்பட்ட சார் பதிவாளர் அலுவலக பதிவேடுகளில் உள்ள ரேகை என்னுடையதல்ல என்றும், அதை ஒப்பிட்டு பார்க்க வேண்டி மனு செய்து, அம்மனு அனுமதிக்கப்பட்டு அதன் பேரில் என்னுடைய மாதிரி கைரேகையும், 14.09.1967 தேதியிட்ட ஆவண எண் 3251/1967 சம்பந்தப்பட்ட சார் பதிவாளர் அலுவலக கைரேகை பதிவேட்டில் உள்ள கைரேகையும் கைரேகை நிபுணரால் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். கைரேகை நிபுணர் எனது கைரேகையும், 14.09.1967 தேதியிட்ட ஆவண எண் 3251/1967 சம்பந்தப்பட்ட சார் பதிவாளர் அலுவலக கைரேகை பதிவேட்டில் உள்ள கைரேகையும் ஒன்றாக ஒப்பிட்டு போகிறது என்று 22.10.2020 அன்றே அறிக்கை வரப்பெற்றுள்ளது என்றால், சரியல்ல. அறிக்கை நீதிமன்றம் வரப்பெற்ற விவரம் தெரியுமா என்றால், தெரியும். கைரேகை நிபுணர் அறிக்கை தவறானது என்றும், அதை வேறு ஆய்வு கூடத்திற்கு அனுப்ப வேண்டும் என்றும் நான் மனு எதுவும் செய்தேனா என்றால், இல்லை. கைரேகை நிபுணரின் அறிக்கை சரியாது என்ற காரணத்தால்தான், அந்த அறிக்கையை மறு ஆய்வு செய்யக்கோரி நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால், சரியல்ல. 1967-ம் ஆண்டிலிருந்து நாளது வரை தாவா சொத்துகள் 1-ம் பிரதிவாதியின் சுவாதீனத்தில் இருந்ததாக சொல்லியுள்ள நிலையில் 1-ம் பிரதிவாதி எனது கைரேகை மோசடியாக பெற்று கிரயப் பத்திரம் எழுதிக் கொண்டார் என்று சொல்லி காவல் நிலையத்தில் இதுநாள் வரை புகார் எதுவும் கொடுத்தேனா என்றால், இல்லை. குற்றவியல் நீதிமன்றத்தில், தனிக்குற்ற முறையீடு எதாவது 1-ம் பிரதிவாதியின்மீது தாக்கல் செய்தேனா என்றால், இல்லை. பொய்யான ஆவணம் தயாரித்து தாவா சொத்துக்களை அபகரித்துக் கொண்டோம் என்றும், எனவே தாவா சொத்துக்களின் சுவாதீனத்தை என்னிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கூறி 1-ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்றால், இல்லை. 1-ம் பிரதிவாதியின் பெருக்கு எழுதிக் கொடுத்த கிரயப்பத்திரம் உண்மையாது

என்பதால்தான் அதை எதிர்த்து இதுநாள் வரை எந்தவித சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால், சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில், 1967-ம் ஆண்டு போர் நடந்து கொண்டிருந்ததால் என்னால் விடுமுறையில் வரமுடியவில்லை என்று சொல்லியுள்ளதால், அந்த சமயத்தில் எந்த போர் நடந்தது என்றால், இந்தியா-சீனா போர் நடந்தது. 1962-ம் ஆண்டுதான் இந்தியா - சீனா போர் நடந்தது என்றால், சரிதான். 1971-ம் ஆண்டுதான் இந்தியா - பாகிஸ்தான் போர் நடைபெற்று வங்காளதேசம் உறுவானது என்றால், சரிதான். அதன்பின் 1998-ம் ஆண்டு மீண்டும் இந்தியா - பாகிஸ்தான் போர் நடைபெற்றது என்றால், சரிதான். எனவே 1967-ம் ஆண்டு எந்த போரும் நடக்கவில்லை என்றால், சரியல்ல. 1967-ம் ஆண்டு இந்தியா முழுக்க சட்டமன்றத்திற்கும், நாடாளுமன்றத்திற்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடைபெற்றது என்றால், சரியல்ல. எனவே 14.09.1967 தேதியிட்ட கிரயப் பத்திரம் நான் எழுதிக் கொடுத்தது உண்மை என்றும், வழக்கிற்காக வேண்டி இந்த பத்திரத்தை எழுதிக் கொடுக்கவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றால், சரியல்ல. 14.09.1967 தேதியிலிருந்தே 1-ம் பிரதிவாதி அவரது குடுபத்துடன் தாவா சொத்தை அனுபவித்து வரும் நிலையில் 31.08.2013 அன்று காலை 7 மணியளவில் 1 முதல் 3 வரை பிரதிவாதிகள் ஆயுதங்களுடன் வந்து தாவா சொத்தை அவர்கள் சொத்துடன் சேர்க்க முற்பட்டதாக சொல்லியுள்ளது பொய் என்றால், சரியல்ல. 31.08.2013 அன்று நான் சொல்வதுபோன்று எந்த நிகழ்வும் நடக்கவில்லை என்றால், சரியல்ல. 14.09.1967 முதல் உரிய கிரயப் பத்திரத்தின் அடிப்படையில் 1-ம் பிரதிவாதி தாவா சொத்துக்கு தன் பெயரில் வருவாய் துறை ஆவணங்களைப் பெற்று சட்டப்படி அனுபவித்து வருகிறார் என்றும், எனவே தாவா சொத்துக்கள் 1-ம் பிரதிவாதிக்குப் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால், சரியல்ல. தாவா சொத்துக்கு 1-ம் பிரதிவாதியே இதுநாள் வரை கந்தாயமும் செலுத்திவருகிறார் என்றால், சரியல்ல. 14.09.1967 முதல் தாவா சொத்துக்கள் 1-ம் பிரதிவாதியின் தொடர் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருவதால் நான் சொல்வதுபோல் 2013-ம் ஆண்டு 1 முதல் 3 வரை பிரதிவாதிகள் அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்ய வேண்டி அவசியமில்லை

என்றால், சரியல்ல. 1967 முதல் இவ்வழக்கு தாக்கல் செய்த நாள் வரை, 1-ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரயம் குறித்து நான் எந்தவித சட்ட நடவடிக்கையும் எடுக்காததால் இவ்வழக்கு காலதோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. 1-ம் பிரதிவாதி என்மீதும், என் மனைவி ஜெயலட்சுமி, சின்னசாமியின் மகன்கள் சண்முக சுந்திரம், வேங்கடபதி, மணி, யுவராஜ் ஆகியவர்கள்மீது தாவா சொத்தை பொறுத்தும், வேறு சொத்துக்களை பொறுத்தும், இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 377/2013 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. 1-ம் பிரதிவாதி மேற்படி வழக்கை சரியான பரிகாரத்திற்காக வேண்டி உண்மையான சங்கதிகளைக்கூறி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், நான் பொய்யான சங்கதிகளைக்கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. 1-ம் பிரதிவாதியிடமிருந்து தாவா சொத்துக்களை அபகரிக்க வேண்டியும், ஆதாயம் பெற வேண்டியும் பொய்யான சங்கதிகளைக்கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் வழக்கை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால், சரியல்ல.

1 முதல் 3 வரை பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துகொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

**<u>4 முதல் 9 வரை பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>** இவ்வழக்கில் 4 முதல் 9 வரை பிரதிவாதிகளுக்கு எதிராக பரிகாரம் எதுவும் கேட்காததால் வழக்கு அவர்களுக்கு எதிராக தள்ளுபடி செய்யவேண்டும் என்றால், சரியல்ல.

வாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time: 12.47 P.M.

**ஒப்பம்/- ஜி. யுவராஜ்**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**